OS 210/2019

பி.வா.சா.1 ராமலிங்கம் த/பெ பூவாத்த கவுண்டர்

நாள் 09.02.2026

**குறுக்கு விசாரணை**

1. எனது தந்தை பலராமன் கவுண்டர், வெள்ளச்சி அம்மாளிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். தஞ்சான் என்பவரிடம் இருந்து எனது தகப்பனார் சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். மொத்தம் எவ்வளவு இடம் என்றால் பூர்வீக சொத்து மற்றும் எனது தந்தை கிரையம் வாங்கியது மொத்தம் 1 ஏக்கர் 25 செண்ட் ஆகும். எனக்கு சொந்தமாக வீடு இருக்கிறது என்றால் இருக்கிறது. நான் சொல்லும் வீட்டில் தான் நானும் என் பெற்றோரும் எனது சகோதரரும் ஒன்றாக இருந்தோம் என்றால் சரிதான். என் அப்பா உயிருடன் இருக்கும் போது என் பெயரில் சொத்து வாங்கினார் என்றால் சரிதான். சொத்து வாங்கும் போது எனது அண்ணனும் உடன் இருந்தார் என்றால் இல்லை தனியாக சென்றுவிட்டார். எனக்கும் எனது அண்ணனுக்கும் எனது தகப்பனாருக்கும் இடையே சொத்து பிரித்ததற்கு ஆதாரம் இருக்கிறதா என்றால் இல்லை. எனது அப்பா எப்போது இறந்தார் என்றால் 2000 ஆண்டும் 1ம் மாதம் இறந்துவிட்டார். நான் சுமாராக படிப்பேன் என்றால் சரிதான். நான் 10ம் வகுப்பு வரை படித்து இருக்கிறேன் என் அண்ணன் படிக்கவில்லை என்றால் சரிதான். என் அண்ணன் தான் எங்கள் வீட்டில் ஆடு மாடு மேய்ப்பார் என்றால் இல்லை நானும் மேய்த்து இருக்கிறேன்.

2. ஆடு மாடு மூலம் வந்த வருமானத்தில் குடும்பத்திற்கு செலவு செய்திருக்கிறேன் என்றால் சரிதான். 14.07.1993 தாவா 10 முதல் 15வது அயிட்ட சொத்துகளை என் பெயரில் வாங்கப்பட்டது அப்போது என் அப்பா அம்மா என்னோடு தான் இருந்தார்கள் என்றால் சரிதான். கிரைய ஆவணம் என் பெயரில் இருப்பதால் என் பெயருக்கு பட்டா வாங்கப்பட்டது என்றால் சரிதான். எனது அண்ணன் ஆடு மாடு மேய்த்ததில் வந்த வருமானம் கொண்டு எனது அப்பா கொடுத்த வருமானம் கொண்டு என் பெயரில் சொத்து வாங்கப்பட்டது என்றால் இல்லை. எனது பெயரில் பட்டா மாறுவதற்கு மனு கொடுத்தேன் என்றால் சரிதான். நான் யாரிடம் இருந்து கிரையம் வாங்கினேன் என்றால் எம்.கே.ராமசாமி, அண்ணாமலை, சண்முகம் ஆகியோரிடம் இருந்து கிரையம் வாங்கினேன். நான் சொத்து வாங்கிய 1 வருடத்திற்கு பிறகு எனது அப்பா இறந்துவிட்டார். எனது தகப்பனாருக்கு ஆஸ்துமா நோய் இருந்ததால் அவரால் எங்கும் செல்லமுடியாது என்பதால் என் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றால் எனது அண்ணனுடன் பிரித்து கொள்ளும் படி என் தந்தை சொன்னார் என்றாலும் இல்லை.

3. எனது அப்பா பெயரில் வாங்கப்பட்ட சொத்து என் பெயரில் வாங்கப்பட்ட சொத்து குடும்ப சொத்து என்றால் இல்லை. அதனால் தான் கூர்சீட்டு மூலம் நாங்கள் பாகம் பிரித்து கொண்டோம் என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் கூர்சீட்டில் எனது சித்தப்பா சொத்தை பிரித்துகொண்டதாக விவரம் இருக்கிறதா என்றால் இல்லை. ஆடு மாடு மேய்த்து வந்த வருமானத்தை எனது அண்ணன் எனது அப்பாவிடம் கொடுத்தார் என்றால் யாரிடம் கொடுத்தார் என்று தெரியாது. நான் கேரளாவில் என்ன வேலை செய்தேன் என்ன சம்பாத்தியம் பெற்றேன் என்பதற்கு ஆதாரம் வைத்திருக்கிறேனா என்றால் தேவைப்படும் என்று தெரிந்திருந்தால் வைத்திருப்பேன். நான் கேரளாவில் சென்று சம்பாதித்ததாக கூறுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகள் அனைத்தும் குடும்ப சொத்துகள் என்றால் சரியல்ல.

4. வீடு பாகம் பிரித்துகொண்டோமா என்றால் 1995ம் ஆண்டிலேயே என் தகப்பனார் பிரித்து கொடுத்தார்.